# முரசொலி

பக்கங்கள் ஆறு — விலை ரூபா 5.00

முரசு 06 ஒலி 122 பிரசோற்பத்தி பங்குனி 15 (28.03.1992) சனி


## மணலாறில் வறட்சியுடனும் படையினர் போரிட்டனராம்

மணலாறில் படையினர் அண்மையில் மேற்கொண்ட ஒபரேஷன் ஹயபார நடவடிக்கையின் போது புலிகளின் கடும் எதிர்ப்புடன் வறட்சியையும் சந்திக்க வேண்டியிருந்ததாக கொழும்பு பத்திரிகை ஒன்று செய்திவெளியிட்டுள்ளது இந்நடவடிக்கையிலீடுபட்ட படையினருக்கு இரண்டு நீர் போத்தல்களே வழங்கப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது. படையினருடன் நீர் பௌசர்களும், உணவு ட்ராக்டர்களும் எடுத்துச் செல்லப்பட்டதாக அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. மணலாறில் இந்திய இராணுவமும் தனது நடவடிக்கையின் போது வறட்சியினால் பெரிதும் பாதிக்கப்பட்டமை இங்கு குறிப்பிடத்தக்கது.

# ஸ்ரீலங்கா இராணுவ அணுகுமுறை தமிழீழ அரசை அமைப்பதில் முடியும்

## கத்தோலிக்க உயர்மட்ட தூதுக்குழுவிடம் விடுதலைப்புலிகள் தரப்பில் தெரிவிப்பு

**தமிழர் பிரச்சினையை தீர்க்காது ஸ்ரீலங்கா அரசு காலத்தைக் கடத்தினால் அல்லது இராணுவ அணுகுமுறையைக் கடைப்பிடித்தால் அது தமிழீழ தனியரசு அமையும் புறசூழ்நிலையை ஏற்படுத்தும். இவ்வாறு யாழ்வந்துள்ள கத்தோலிக்க உயர்மட்டத் தூதுக்குழுவிடம் புலிகள் தரப்பில் நேற்று வலியுறுத்தப்பட்டது.**

நேற்றுக்காலை புலிகளின் யாழ் மாவட்ட அரசியல் செயலகத்தில் கத்தோலிக்க குழுவினருக்கும் புலிகளுக்கும் இடையில் பேச்சுவார்த்தைகள் நடைபெற்றன.

ஒன்றரை மணித்தியாலங்கள் நீடித்த பேச்சுகளின் போது "புலிகள் என்றுமே சமாதானத்திற்கு ஆதரவாகவே உள்ளனர், போர் நிறுத்தம், பேச்சுவார்த்தை நடத்தவும் புலிகள் என்றுமே தயாராக இருந்துள்ளனர். ஆனால் ஸ்ரீலங்கா அரசு சமரஸமுயற்சிகளை கைவிட்டு இராணுவ அணுகுமுறையையே கடைப்பிடித்துவருகிறது என புலிகள் தரப்பில் எடுத்துக்கூறப்பட்டது.

தமிழர் பிரச்சினையை தீர்ப்பதில் அரசுக்கு எவ்வித அக்கறையும் இல்லை என புலப்படுகிறது பாராளுமன்ற தெரிவுக்குழு யாழ் வர மறுத்துள்ள நிலையில் புலிகள் எவ்வித யோசனைகளையும் குழுவிடம் சமர்ப்பிப்பதில் அர்த்தமேயில்லை எனவும் புலிகள் தரப்பில் சுட்டிக்காட்டப்பட்டது,

விரைவில் பௌத்த பிக்குகள் கொண்ட நல்லெண்ணக் குழு உட்பட தென்னிலங்கை தூதுக்குழுக்களை கூட்டிவர தாம் முயற்சிப்பதாக கத்தோலிக்க குழுவினர் குறிப்பிட்டனர்,

பேச்சுகளின் போது கத்தோலிக்க குழுவில் சிலாபம் மறைமாவட்ட ஆயர் அதிவண. மார்க்கஸ் பெர்னாண்டோ, கண்டி மறைமாவட்ட ஆயர் அதிவண. வியனி பெர்னாண்டோ, கத்தோலிக்க துறவிகள் சபை தலைவர் வண. அலெக்ஸாண்டர், கத்தோலிக்க பொது நிலைய தலைவர் நியூட்டன் பெர்னாண்டோ உட்பட ஏழுபேர் பங்கு கொண்டனர்

புலிகள் தரப்பில் அன்ரன் பாலசிங்கம், யோகி. யாழ் மாவட்டதளபதி செந்தாளன் மகளிர் முன்னணி பொறுப்பாளர்செல்வி ஜெயா, பாரதி, விடுதலைப்புலிகள் பத்திரிகையின் ஆசிரியர் ரவி ஆகியோர் கலந்து கொண்டனர்,

பேச்சுகளை முடித்துக் கொண்டு கத்தோலிக்க குழுவினர்நேற்றுமாலைகொழும்பு புறப்பட்டுச் சென்றனர்.

## புலிகள் - கத்தோலிக்கக்குழு பேச்சு அமெ. செய்திகள் முக்கியத்துவம்

கத்தோலிக்க உயர்மட்ட நல்லெண்ணக்குழுவினர் நேற்று யாழ்ப்பாணத்தில் விடுதலை புலிகளுடன் பேச்சுவார்த்தைகள் நடத்திய செய்தியை அமெரிக்க வானொலி தொலைக்காட்சி செய்திகள் முக்கியத்துவம் கொடுத்து வெளியிட்டன, நேற்றிரவு ஒலிரபான வொய்ஸ் ஒவ் அமெரிக்கா (VOA) வானொலி செய்திகளிலும்சி. என். என் (CNN) தொலைக்காட்சி செய்திகளிலும் இப்பேச்சுகள் குறித்த செய்தி வெளியிடப்பட்டன,

★ குடாநாடு நடவடிக்கை முன்பாக

## வன்னியை பிடிக்கும் எல்லா முயற்சியும் புலிகளால் பயங்கரமாக முறியடிக்கப்படுகிறது

யாழ்குடா பகுதியில் எந்த இராணுவ நடவடிக்கையும் எடுக்க முன்பாக படையினர் வன்னி பிராந்தியத்தை தமது கட்டுப்பாட்டின் கீழ் கொண்டுவர வேண்டும் ஆனால் வன்னியில் இராணுவம் எடுக்கும் அனைத்துநடவடிக்கையும் புலிகள் பலத்த தாக்குதல் நடத்தி முறியடிக்கின்றனர்

இவ்வாறு கொழும்புப் பத்திரிகையொன்று கருத்து வெளியிட்டுள்ளது, அண்மையில் மணலாறில் நடைபெற்றதும் இது தான் எனக்குறிப்பிடும் அப்பத்திரிகை கடந்த வருடம் செப்டம்பரிலும் மணலாறில் படையினர் மேற்கொண்ட ஒபரேஷன் லைட்னிங் கிரைக் நடவடிக்கையின் போதும் 70 படையினர் பலியாகினர் 600 துருப்புகள் காயமடைந்தனர் 83 படையினர் மிதிவெடியில் காலிழந்தனர் எனச் சுட்டிக் காட்டியுள்ளது

அண்மைய மணலாறு நடவடிக்கையில் புலிகள் நவீன ஆயுதங்கள் கொண்டு படையினரை படுபயங்கரமாக தாக்கினர்எனவும்தெரிவித்துள்ளது.

## பத்து நாள்களுக்குரிய வினாத்தாள்கள் பணிப்பாளரினால் எடுத்துவரப்பட்டன

க. பொ. த. உயர்தரப் பரீட்சையின் 10 நாள்களுக்குரிய வினாத்தாள்கள் யாழ் கல்விப்பணிப்பாளரினால் யாழ்ப்பாணம் எடுத்துவரப்பட்டது

இவ் வினாத்தாள்கள் கொழும்பிலிருந்து காங்கேசன்துறை கொண்டுவரப்பட்டு பின்னர் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தின் உதவியுடன் கீரிமலை சேந்தாங்குளம் பாதையூடாக யாழ்ப்பாணம் வந்து சேர்ந்தது

இதனால் இப்பரீட்சை திட்டமிட்டவாறு ஏப்ரல் 1ஆம் திகதி ஆரம்பமாகும்என தெரிவிக்கப்பட்டுள்ளது. 47

★ உயர்தரப் பரீட்சை காலங்களில்

## இராணுவத் தாக்குதல் நிறுத்த அதிகாரிகளிடம் கோரிக்கை

ஏப்ரல் மாதம் 1 ஆம் திகதி ஆரம்பமாகவிருக்கும் கல்விப் பொதுத் தராதர உயர்தரப் பரீட்சையின் போது இராணுவத்தினர் ஷெல் மற்றும் விமானக் குண்டு வீச்சுத் தாக்குதலை மேற்கொள்ள வேண்டாமெனவும் எந்தவிதக் காரணமும் இன்றி ஊரடங்குச் சட்டத்தையும் அமுல்படுத்தவேண்டாமென வும் யாழ் கல்விப் பணிப்பாளர் கொழும்பில் கூட்டுத் தலைமையக அதிகாரிகளுடன் தொடர்பு கொண்டு பேச்சு நடாத்தியிருப்பதாகத் தெரிய வருகிறது

இந்த விசேட பரீட்சைக்கு இராணுவத்தினர் எதுவித இடையூறுகளையும் மேற்கொள்ள மாட்டார்கள் என இராணுவ அதிகாரிகள் தரப்பில் கூறியிருப்பதாக மேலும் தெரிவிக்கப்படுகிறது 47

இந்திய உள்துறை அமைச்சர் சவான்

## பிரபாவை நாடு கடத்துமாறு அமைச்சர் ரணிலிடம் கோரிகைகை

விடுதலைப்புலிகள் அமைப்பின் தலைவர் பிரபாகரனையும் உளவுப் பிரிவுத் தலைவர் பொட்டம்மானையும் விரைவில் இந்தியாவிற்கு நாடு கடத்த உதவுமாறு இந்திய உள்துறையமைச்சர் எஸ் பி சவான் கோரிக்கை விடுத்துள்ளார்.

புதுடில்லியில் நேற்று தம்மை சந்தித்த அமைச்சர் ரணில் விக்கிரமசிங்கவிடம் சவான் இக்கோரிக்கையை விடுத்தார்.

இவ் விடயத்தில் ஸ்ரீலங்கா இந்தியாவுடன் நெருங்கி ஒத்துழைக்கும் என அப்போது அமைச்சர் ரணில் உறுதியளித்ததாக இந்திய வானொலி தெரிவித்தது.

★ வடபகுதி இரு மாணவர்கள் கொழும்பில்

## ஆகஸ்ட பரீட்சைக்கும் தோற்றி ஏப்ரலிலும் தோற்ற முயற்சி

கடந்த ஆகஸ்ட் மாதம் நடைபெற்ற க பொ. த. உயர்தரப் பரீட்சைக்கு கொழும்பில் தோற்றிய இரு வடபகுதி மாணவர்கள் மீண்டும் ஏப்ரலில் நடைபெறவுள்ள பரீட்சைக்கும் தோற்ற விண்ணப்பித்தமை கண்டு பிடிக்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணத்தில் உள்ள பிரபல கல்லூரி ஒன்றின் மாணவர்களான இவர்கள் தமக்கு அனுமதி அட்டை கிடைக்கவில்லையெனக் கோரியுள்ளனராம்

இவர்களது கோரிக்கையைத் தொடர்ந்து பரீட்சைத் திணைக்களம் விசாரணை நடத்தியபோது இருவரும் ஆகஸ்ட் பரீட்சைக்குத் தோற்றியமை தெரியவந்துள்ளது. (47)

## சில தூதரகங்களுக்கு கொழும்பில் பாதுகாப்பு

கொழும்பில் உள்ள சில வெளிநாட்டுத் தூதரகங்களுக்கு பலத்த பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளது

லிபியாவுக்கு ஆதரவாக சில அமைப்புகள் செயற்படுவதாலேயே இந்த நடவடிக்கைஎடுக்கப்பட்டுள்ளது

லிபியத் தூதரகத்துக்கும் பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளது

இத்தூதரகங்கள்உள்ள வீதிகளில் ரோந்து நடவடிக்கையும் அதிகரித்துள்ளது 47

## 500 மெ. தொ. பொருள்களே இதுவரை எடுத்துவரப்பட்டன

காங்கேசன்துறை களஞ்சியத்திலிருந்து நேற்று வரை 500 மெற்றிக் தொன் உணவுப்பொருள்களே கொண்டுவரப்பட்டதாக செயலக வட்டாரங்கள் தெரிவித்தன.

இதேநேரம் பருத்தித்துறை துறைமுகத்தில் தரித்து நிற்கும் கப்பலில் ஒரு நாளில் மட்டுமே 500 மெற்றிக் தொன் உணவுப் பொருள்கள் இறக்கப்படுகிறது எனவும் அவ் வட்டாரங்கள் தெரிவித்தன, (47)

# யாழ் குடாநாட்டில் நிலப் பயன்பாட்டுத்திட்டம்

வடமாகாண விவசாய செயற்திட்டம் வகுத்தல் தொடர்பான தொடர் கருத்தரங்கு யாழ் பல்கலைக்கழகத்தில் இடம்பெற்றது

யாழ் பல்கலைக்கழகத்துணைவேந்தர் தலைமையில் நடைபெற்ற இக்கருத்தரங்கில், வடமாகாண விவசாய செயற்திட்டமிடலின் கீழ் முதற்கட்ட நடவடிக்கையாக யாழ் குடாநாட்டிற்கான நிலப்பயன்பாட்டுத் திட்டம் ஒன்றினை வகுப்பதற்கான குழு ஒன்று தெரிவு செய்யப்பட்டுள்ளது.

11 பேர் கொண்ட இக்குழுவிற்கு யாழ் பல்கலைக்கழக புவியியற்துறைத் தலைவர் செ. பாலச்சந்திரன் தலைமைவகிப்பது எனவும் இக் குழுவின் முதற் செயற்பாடானது யாழ் மாவட்டத்தின் நிலப்பயன்பாட்டுத் திட்ட அறிக்கையினைத் தற்போதைய நிலைக்கு ஏற்றவாறு தயாரிப்பதுடன், ஒரு மாத காலத்திற்குள் இது தொடர்பான முதலாவது அறிக்கையினை வெளியிடுவதுமாக அமைய வேண்டும் எனவும், முடிவு எடுக்கப்பட்டுள்ளது

யாழ் மாவட்டத்தின் நிலப்பயன்பாடு தொடர்பானவரைபடங்களைத் தயாரிப்பது, தரவுகளைப் பெறுவது என்பவற்றினூடாக இந் நிலப் பயன்பாட்டுத் திட்டம் வகுக்கப்படவுள்ளது

இக் கருத்தரங்கில் எண்ணெய் வித்துக்களைத் திட்டமிட்ட அடிப்படையில் பயிரிடுவதற்காக பொருத்தமான எண்ணெய் வித்துப் பயிரினையும், வடமாகாணத்தில் குறித்த எண்ணெய்வித்துப் பயிரினை பயிரிடுவதற்குப் பொருத்தமான பிரதேசத்தினையும், தெரிவு செய்வது தொடர்பான முடிவினை எடுக்கும் நோக்குடனும் குழுஒன்று தெரிவு செய்யப்பட்டது

இக் குழு எடுக்கும் முடிவின்படி, தெரிவு செய்யப்பட்ட பிரதேசங்களில் தெரிவுசெய்யப்பட்ட எண்ணெய்வித்துப் பயிரைத்திட்டமிட்டவகையில் விவசாயிகள் பயிரிடுவதற்கான உதவி நடவடிக்கைகளை விவசாயவிரிவாக்கப்பகுதி விவசாய ஆராய்ச்சிப் பகுதி என்பவற்றுடன் தமிழீழ ஆய்வு நிறுவனம் இணைந்து மேற்கொள்ளும்

நீர்ப்பாசனத்தின் கீழ் செய்கை பண்ணப்படும் புகையிலை, வெங்காயம், மிளகாய் போன்ற பணப் பயிர்கள் உள்ளூர்த் தேவைக்கு மேலதிகமாகப் பயிரிடப்படும் அதே வேளை சிறுதானிய உற்பத்தி உள்ளூர் நுகர்வினைப் பூர்த்தி செய்யாத நிலையில் இருப்பது குறித்து கவனத்தில் எடுத்து, சிறுதானிய செய்கையை ஊக்குவிப்பது தொடர்பாக எடுக்கக் கூடிய முடிவுகள் பற்றி இக் கருத்தரங்கில் துறைசார்ந்த நிபுணர்களினால் முன் வைக்கப்பட்ட கருத்துக்களும் ஆராயப்பட்டன.

## இன்று சீவக சிந்தாமணி

யாழ் திருமறைக் கலா மன்றம் வழங்கும் "சீவக சிந்தாமணி" என்ற நாடகம் இன்று சனிக்கிழமை காலை 10.30 மணிக்கும் மாலை 4.00 மணிக்கும் இரு காட்சிகளாக யாழ் பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் நடைபெறவுள்ளது.


யாழ்ப்பாண மாநகரசபை

## கேள்வி அறிவித்தல் - 1992

இதுவரை குத்தகைக்குப் பெற்றுக்கொள்ளப்படாத இறைச்சிக்கடைகளுக்கு மீளவும் கேள்விகள் கோரப்படுகின்றன. விண்ணப்ப முடிவு திகதி 09-04-92 ஆகும். விபரங்களுக்கு யாழ்ப்பாண மாநகரசபையின் விளம்பரப் பலகையைப் பார்வையிடுக.

மாநகர ஆணையாளர்,
யாழ்ப்பாணம்.

மாநகர அலுவலகம்,
யாழ்ப்பாணம்.
26-03-1992.

03058



## யாழ். மாநகர சபை சனசமூகநிலையங்களுக்கு

இன்று 28-03-92-ம் திகதி சனிக்கிழமை மாலை 4.30 மணிக்கு யாழ். மத்திய கல்லூரியில் இடம்பெறும் கலந்துரையாடலில் யாழ். மாநகர சபைப் பிரிவுக்குள் இயங்கும் எல்லா சனசமூக நிலையங்களின் தலைவர்களையும் செயலாளர்களையும் தவறாது பங்குபற்றும்படி அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

சுந்தரம் டிவகலாலா
பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர்.

உள்ளூராட்சி இலாகா,
யாழ்ப்பாணம்
92/03/26, 03057


★ உடுப்பிட்டி ப. நோ. கூ. சங்கம்

# வங்கி ஆணையை கொழும்பில் பணமாக்க முடியாத நிலை

பருத்தித்துறை மக்கள் வங்கி கிளையில் வழங்கப்பட்ட பத்து லட்சம் ரூபாவுக்கான வங்கி ஆணையை (Draft) புறக்கோட்டை மக்கள் வங்கியில் மாற்றமுடியாத நிலை உடுப்பிட்டி ப. நோ கூ சங்கத்துக்கு ஏற்பட்டுள்ளது.

இந்த வங்கி ஆணையின் மறுபிரதி (Advice) புறக்கோட்டை மக்கள் வங்கிக்கு சென்றடையாததே இதற்கு காரணம் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இதனால் உடுப்பிட்டி ப. நோ. கூ. சங்கம் பொருள்களைக் கொள்வனவு செய்ய முடியாத நிலை ஏற்பட்டுள்ளதாகவும் கொழும்புச் செய்திகள் தெரிவிக்கின்றன.

இதேவேளை தற்போதுள்ள சூழ்நிலையைக் கருத்திற் கொண்டு இந்த வங்கி ஆணைகளை உடனடியாக மாற்றக் கூடிய வகையில் குடாநாட்டில் உள்ள ஏனைய மக்கள் வங்கி கிளைகள் வங்கி ஆணையின் பிரதியை சம்பந்தப்பட்டவருக்கு கையளித்து வருவதாகவும் தெரியவருகிறது. 45

★ அன்னை பூபதி நினைவு

# நாவாந்துறையில் இன்று அடையாள உண்ணாவிரதம்

அன்னை பூபதியின் நான்காவது நினைவு தினத்தை முன்னிட்டு இன்று நாவாந்துறை றோ. க. த. க. பாடசாலையில் அடையாள உண்ணாவிரதம் ஒன்று அனுட்டிக்கப்படஉள்ளது.

இவ்வுண்ணாவிரதத்தில் வலிகாமம் மேற்கு கடற்புலிகள் பிரதேசத்தில் வாழும் மக்கள் பங்கு கொள்ளஉள்ளனர். காலை 8மணிக்கு ஆரம்பமாகி உண்ணாவிரதத்தின் முடிவில் இரவு 7 மணிக்கு நினைவஞ்சலிக்கூட்டம் இடம் பெறவுள்ளது. 15

# பாடசாலைகள் முன்பாகவும் காவல்துறை பணியில்

யாழ்ப்பாணப் பாடசாலைகளின் முன்பாகவும் தமிழீழ காவல்துறையினர் தமது பணியினை நேற்றில் இருந்து ஆரம்பித்துள்ளனர், காலை நேரங்களில் பாடசாலைகள் ஆரம்பிப்பதற்கு முன்பாகவும் மாலை நேரங்களில் பாடசாலைகள் முடியும் நேரங்களிலும் இப்பாதைகளின் வீதி ஒழுங்குகளை கண்காணிக்கும் முயற்சியில் ஈடுபட்டனர். 15

# வேலணைக் கோட்டத்தின் முத்தமிழ் விழா ஆரம்பம்

வேலணைக் கோட்டக்கல்வி அலுவலகத்தினரால் நடத்தப்படும் முத்தமிழ் விழா நிகழ்ச்சியின் முதலாம் நாள் நிகழ்ச்சி நேற்று யாழ் சென் ஜோன்ஸ் அக்கடமியில் கோலாகலமாக ஆரம்பமாகியது.

நிகழ்ச்சிக்கு வேலணைக் கோட்டக்கல்வி அதிகாரி சி. புலேந்திரன் தலைவராகவும், யாழ் மேலதிக அரசாங்க அதிபர் கு. சண்முகநாதன் பிரதம விருந்தினராகவும் கலந்து கொண்டனர்

தமிழீழ தேசியக்கொடியை தமிழீழ விடுதலைப் புலிகளின் மூத்த உறுப்பினர் திரு இளங்குமரன் ஏற்றிவைத்தார்.

# வெங்காயம், புகையிலை ஒரு போகத்தில் பயிரிடப்படும்

யாழ் மாவட்டத்தில் வருவாய் தரும் வெங்காயம் புகையிலை போன்ற பயிர்களை ஒரு போகத்தில் மட்டும் பயிரிடுவதற்கான நடவடிக்கைகள் தற்சமயம் மேற்கொள்ளப்பட்டு வருகிறது

இப்பயிரினங்களை விவசாயிகள் தொடர்ந்து மேற்கொண்டு வருவதால் உணவு உற்பத்தி தரும் பயிரினங்களுக்கு பெரும் கிராக்கி ஏற்படுவதோடு உணவுப்பொருள்களுக்கும் பெரும் தட்டுப்பாடு ஏற்படும் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

இவ்வகையில் பயிரினங்களை ஒரு போகத்தில் மட்டும் தான் விவசாயம் மேற்கொள்ள முடியும் இது மிக விரைவில் நடைமுறைக்கு கொண்டுவரப்படும் என யாழ் செயலக வட்டாரம் தெரிவித்தது. 47

# கோட்ட அலுவலகம் முன்பு விரைவில் மறியல் போராட்டம்

யாழ் மாவட்டப் பாடசாலைகளைச் சேர்ந்த தொண்டர் ஆசிரியர்கள் வெகுவிரைவில் கோட்டக்கல்வி அலுவலகங்கள் முன்பாகவும் மறியல் போராட்டத்தை நிகழ்த்த உள்ளனர்

இதற்கென ஒவ்வொரு கோட்டக் கல்வியின் கீழ் உள்ள பாடசாலைகளுக்குமான பிரதிநிதிகள் தெரிவு செய்யப்பட்டனர். 15

# கிராம அபிவிருத்தி சங்கம் அபிவிருத்தி செய்ய நடவடிக்கை

கோப்பாய் உதவி அரசாங்க அதிபர்பிரிவில் செயல்படாமல் இருக்கும் கிராம அபிவிருத்திச் சங்கங்கள் மாதர் கிராம அபிவிருத்திச் சங்கங்கள் என்பவற்றை புனரமைக்க கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் கே. சிவகுமாரன் நடவடிக்கை மேற்கொண்டு வருகிறார்

இப்பிரிவிலுள்ள பதவிக்காலம் முடிவுற்ற அனைத்து சங்கங்களும் எதிர்வரும் ஏப்ரல் மாதம் 30ஆம் திகதிக்கு முன்பாக வருடாந்த பொதுக்கூட்டங்களை நடத்தி புதியஉத்தியோகத்தர் தெரிவுகளை நடத்துமாறும் பணிக்கப்பட்டுள்ளனர். 6


யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்
இலங்கை
இராமநாதன் நுண்கலைக்கழகம்

இசைக்கலைமணி நாட்டியக்கலைமணி டிப்ளோமா பயிற்சி நெறியினைப் பயிலுவதற்கான அனுமதி 1991/92

மேற்குறித்த பயிற்சி நெறியினை பயில அனுமதிப்பதற்கான விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படவுள்ளன.

தகைமைகள்:-

1 பரீட்சார்த்திகள் க. பொ. த (உயர்தரம்) பரீட்சையில் ஒரே தடவையில் குறைந்தது மூன்று பாடங்களில் கர்நாடக சங்கீதம் அல்லது பரதநாட்டியம் ஒரு பாடமாகச் சித்தி பெற்றிருத்தல் வேண்டும் கர்நாடக சங்கீதம் அல்லது பரதநாட்டியத்தில் சித்தி பெறாதவர்கள் வட இலங்கைச் சங்கீத சபையினரால் நடாத்தப்படும் தரம் 4இல் சித்தி பெற்றிருப்பதுடன் க.பொ.த (உயர்தரம்) பரீட்சையில் மூன்றுபாடங்களில் சித்தி பெற்றிருத்தல் வேண்டும்

2. பரீட்சார்த்தி 31 1 92 அன்று 15வயதிற்கு மேற்பட்டவராகவும் 25வயதிற்கு மேற்படாதவராகவும் இருத்தல் வேண்டும்.

அனுமதிபற்றிய விபரங்களும், விண்ணப்பப் பத்திரமும் சிரேஷ்ட உதவிப் பதிவாளர் (தேர்வுகள்) தேர்வுக்கிளை, அவரிடமிருந்து நேரில் ரூபா 15க்கான பற்றுச்சீட்டு (பல்கலைக்கழக) செலுத்தியோ, தபால் மூலம் எனின் 23 X 10 செ மீ. அளவுள்ள தபால் மேலுறை ஒன்றை முத்திரையிட்டு, விலாசமிட்டு ரூபா 15க்கான காசுக் கட்டளையை நிதியாளர், யாழ். பல்கலைக்கழகம் என பெற்று அனுப்புவதன்மூலம்பெற்றுக்கொள்ளலாம்.

விண்ணப்ப முடிவுத் திகதி 30-04-1992

பதிவாளர்

03059

# தமிழன் தனித்துவ பெருமை குறைக்கிறது இவ்'விடுகதை'

தமிழர்தம் மாட்சிமை விளம்பும் உண்மையான, யதார்த்தபூர்வமான ஆதாரங்கள் பலப்பல உண்டு. இந்த வகையில் சில தப்பான சொல்வழக்குகள் இனத்தின் தனித்துவத்தை மாசுபடுத்தத்தக்க வகையில் அமைந்திடவுந்தான் செய்கின்றன.

'பந்திக்கு முந்து, படைக்குப் பிந்து" என்றதோர் உதாரணத்தை எடுத்துச்சொல்வோம். விருந்தோம்பலில் முன்னிற்கும் தமிழன் பந்திக்கு முந்துவானா? வீரத்தின் விளைநிலம் தமிழன் பூமி, அவன் படைக்குப் பிந்துவானா? ஆக, இதுபற்றித் தமிழகத்தின் பிரபல எழுத்தாளரும், 'தீபம்' இதழ் ஆசிரியருமான நா. பார்த்தசாரதி (மணிவண்ணன்) அவர்கள் என்ன விளக்கம் சொல்கிறார் என்பதனை இங்கே பார்ப்போம். 'பந்திக்கு முந்தும், படைக்குப் பிந்தும் அது என்ன?' என்பது ஓர் விடுகதை. அதற்கான விளக்கம்; பந்தியில் உணவுண்ண முந்துவது வலக்கை. படையில் (வில்லும் அம்புமாக) பிந்துவது, அதனை மாற்றானை நோக்கி இழுக்கையில் பின்னோக்குவது வலக்கை. எனவே தமிழன் பெருமையைக் குறைத்து எடைபோடுகிறது இச்சொல்வழக்கு. 'ம்' என்ற பதம் விடுபட்டு மருவியதால்தான் இந்நிலை.

# வடபகுதியில் ஏற்பட்டிருக்கும் தீவிர போஷாக்கின்மை

**சங்கர்**

சிறுவர் பாதுகாப்பு நிதியம் தெற்பேலி பண்டிதர் குடியிருப்பிலும், யாழ்ப்பாண மாநகர சுகாதார வைத்திய அதிகாரி அரியாலையிலும், போறூட் நிறுவனம் சங்கானையிலும் நடாத்திய போஷாக்கின்மை தொடர்பான ஆய்வு அறிக்கைகள் யாழ்ப்பாணம் அரச சார்பற்ற நிறுவனங்களின் இணையம் 13-3-92 ஆம் திகதி நடாத்திய கலந்துரையாடலில் பரிசீலிக்கப்பட்டன.

இக்கலந்துரையாடலின் முடிவில் துறைசார் நிபுணர்கள் ஐவரைக் கொண்ட குழுவொன்று விரிவான அறிக்கை சமர்ப்பிக்கவென நியமிக்கப்பட்டது.

இக் குழுவின் ஆரம்ப அறிக்கை 23-3-92 ஆம் திகதி நடைபெற்ற அரச சார்பற்ற நிறுவனங்களின் இணையத்தின் கூட்டத்தில் விளக்கப்பட்டது.

1977 ஆம் ஆண்டுக்கான புள்ளி விவரங்களின்படி நிறைக்கு உயரம் என்ற அடிப்படையில் தீவிர போஷாக்கின்மை யாழ்ப்பாண மாவட்டத்தில் 3.7 வீதமாக இருந்தது. இதுவே நாட்டின் போஷாக்கின்மை விகிதத்தில் குறைந்ததாகவிருந்தது.

அதே நேரம் மாவட்ட தீவிர போஷாக்கின்மை கொழும்பு 4 9 வீதமாகவும், கண்டி 8 5 வீதமாகவும் இருந்துள்ளது.

இவ் வருடம் தெற்பேலியில் சிறுவர் பாதுகாப்பு நிதியம் நடாத்திய ஆய்வின்படி தீவிர போஷாக்கின்மை 6 8 வீதமாக கணிக்கப்பட்டுள்ளது. இதன்படி தீவிர போஷாக்கின்மை இரட்டிப்பாக அதிகரித்துள்ளதைக் கவனிக்கலாம்.

இப்பட்டியில் 2000 குழந்தைகள் தீவிர போஷாக்கின்மையால் பாதிக்கப்பட்டிருப்பதாக கணிக்கப்பட்டுள்ளது.

யாழ் மாவட்ட போஷாக்கின்மை இரண்டு மடங்காக அதிகரித்தபோதும் 1977 ஆம் ஆண்டின் சராசரி விகிதத்தை மீறவில்லையென்ற கருத்தும் சில வட்டாரங்களில் முன் வைக்கப்பட்டது.

இதன் காரணமாக தீவிர போஷாக்கின்மையை நிறைக்கு வயது என்ற முறையின் அடிப்படையில் இக் குழு கணித்தது.

இதன்படி 1977 ஆம் ஆண்டு 32 5 வீதமாக விருந்த போஷாக்கின்மை 73.0 வீதமாக அதிகரித்துள்ளமை வெளிப்படுத்தப்பட்டது.

குழந்தைகள் நிலைமட்டுமல்ல கர்ப்பிணித் தாய்மார்களின் நிலையும் மோசமடைந்துள்ளது. 1977 இல் 15% ஆகவிருந்த இரத்த சோகை 1992 இல் 100 % மாக அதிகரித்துள்ளது.

1989 இல் 19 % ஆகவிருந்த குறைந்த பிறப்பு நிறை 1991 இல் 23 ஆக அதிகரித்துள்ளது.

இந்தப் போஷாக்கின்மையை நீக்குவதற்கு எட்டு அம்ச சிபார்சுகளை இக்குழு முன் வைத்துள்ளது. இவை அரச மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்களால் நடவடிக்கைக்காக பரிசீலிக்கப்படவுள்ளன.

இந்த விடயத்தை முழுமையாக ஆராய்ந்த போது சில விஷயங்களை இனங்காணக் கூடியதாக விருந்தது.

எமது மக்களின் பாரம்பரிய உணவு முறை போஷாக்கின்மை பாதிப்பை மிகக் குறைவான விகிதத்தில் வைத்திருக்க உதவியுள்ளது நாளாந்த உணவிலேயே சத்துணவுச் சமநிலையைத் தரக்கூடிய சோறு, பருப்பு, பயறு, உழுந்து, குரக்கன் போன்ற உணவுப் பொருள்களை நாம் உட்கொண்டு வந்துள்ளோம்.

இந்த வழக்கத்திலிருந்து நாம் சூழ் நிலை காரணமாக மாறியதும் பாதிப்புக்கான ஒரு காரணமாக அமைந்துள்ளது. எனவே எமது பாரம்பரிய உணவு முறையை நாம் மீண்டும் கைக்கொள்ள வேண்டும். சத்துணவுக்கும் போஷாக்குக்கும் வெளியுலகையும் அரசாங்கத்தையும் நம்பியிராமல் எமது பிரதேசத்தில் உற்பத்தியாகும் உழுந்து, பயறு, குரக்கன், சோயா போன்ற தானியவகைகளை நாளாந்த உணவுப் பொருள்களாகக் கொள்வதன் மூலம் போஷாக்கின்மையை நீக்குவதுடன் உள்ளூர் உற்பத்தியையும் பெருக்கலாம் நாம் எம்மிலேயே தங்கி நின்று எமது பொருளாதாரத்தை வளர்ப்பதுடன் போஷாக்கின்மையையும் நீக்கலாம்.

# நோய்த்தடுப்பு நடவடிக்கை வலியுறுத்திக் கோரிக்கை

பருத்தித்துறைப் பகுதிக்கு விசர்நாய்க் கடித் தடுப்பூசி மருந்துகளையும், நாய்களித்கான நோய்த்தடுப்பூசி மருந்துகளையும் அனுப்பி வைக்க உடன் நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு வராத்துப்பளை சனசமூக நிலையச் செயலாளர் திரு மு பரமேஸ்வரன் யாழ் பிராந்திய சுகாதார சேவைகள் அத்தியட்சகரைக் கேட்டுள்ளார்.

இம்மருந்துகள் தட்டுப்பாட்டால் இப் பகுதியில் விசர் நாய்க்கடியால் மரணமாவோர் அதிகரித்து வருவதாகவும் வீட்டு நாய்களுக்குத் திடீர் திடீரென விசர் நோய் ஏற்படுவதனால் மக்கள் பீதியும் கலக்கமும் அடைந்துள்ளனர் என்றும் இக் கோரிக்கையில் அவர் குறிப்பிட்டுள்ளார்.

பருத்தித்துறை நகரசபையும், பருத்தித்துறை பிரதேச சபையும் கட்டாக்காலி நாய்களை ஒழிக்கும் நடவடிக்கைகளைத்துரிதப் படுத்த வேண்டும் எனவும் திரு பரமேஸ்வரன் இச்சபைகளின் அதிகாரிகளைக் கேட்டிருக்கின்றார். 11

# புதிதாக 15000 ஆசிரியர்கள் நியமனம் பெற ஏற்பாடு!

ஆசிரியர் பற்றாக்குறையை நீக்கப் பதினையாயிரம் புதிய ஆசிரியர்கள் நியமிக்கப்படுவர் என்று தெரிவிக்கப்படுகின்றது.

நாட்டில் நிலவும் ஆசிரியர் பற்றாக்குறையை இவ்வருடத்துக்குள் முற்றாகத் தீர்த்து வைப்பதற்கான தீர்மானத்தை அமைச்சரவை நிறைவேற்றியுள்ளது.

இதன் அடிப்படையிலேயே இப் புதிய நடவடிக்கை என்று அமைச்சரவைப் பேச்சாளர் லொக்கு பண்டார தெரிவித்தார்.

# வேலைப்பளுவைக் குறைக்க புஷ்ஷுக்கு ஆலோசனை

வேலைப் பளுவைக் குறைக்கும்படியும் மேலும் ஓய்வெடுக்கும்படியும் அமெரிக்க ஜனாதிபதி ஜோர்ஜ் புஷ்ஷுக்கு அவரது தனிப்பட்ட மருத்துவர்கள் ஆலோசனை கூறியுள்ளனர்.

அவர் தொடர்ச்சியாகப் பல வைத்திய சிகிச்சைகளுக்கு உட்படுத்தப்பட்டார் என்று தெரிவிக்கப்படுகிறது

இதன் பெறுபேறுகள் நல்ல முறையில் அமைந்திருந்ததாகத் தெரிவிக்கப்பட்டது.

தேர்தல் பிரசாரத்தில் ஈடுபடவேண்டிய நிலையில் அவர் உள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

# இராமர் ஆலயம் கட்டியே தீருவோம்என்கிறார் ஜோஷி

அயோத்தியில் இராமர் ஆலயம் கட்டியே தீருவோம் என பாரதிய ஜனதாக் கட்சித் தலைவர் முரளிமனோகர் ஜோஷி மீண்டும்கூறுரைத்துள்ளார்.

பட்னாவில் பேசிய அவர் உத்தரப்பிரதேஷ் மக்கள் இதற்கான அங்கீகாரத்தைத் தமது கட்சிக்கு அளித்துள்ளனர் என்றும் அவர் சொன்னார்.

## நியமனம்

வடமராட்சி மேற்கு தெற்கு பிரதேசசபையின் (கரவெட்டி) நிர்வாக அதிகாரியாக திரு எல். இளைநாயகம் நியமிக்கப்பட்டுள்ளார். (11)

# வட, கிழக்கு ஆசிரியர்க்கு மார்ச் மாதச் சம்பளம் வழங்கல் ஆரம்பமானது

வடக்கு, கிழக்கில் உள்ள ஆசிரியர்களுக்கான மார்ச் மாதத்திற்குரிய சம்பளத்தை நேற்று முன் தினம் முதல் வழங்கும் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன என்று தெரிவிக்கப்படுகிறது.

புத்தாண்டினை யொட்டி இவ் விசேட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

## அஞ்சலிக் கூட்டம்

முதூர்க்கனமாடி 09 06.91 அன்று விழுப்புண்பட்டு 23 03.92 அன்று வீரச்சாவைத் தழுவிக்கொண்ட லெப். நளன் (செல்வசேகரம்-கணேசலிங்கம் - மூதூர்), மணலாற்றில் கனமாடி வீரச்சாவைத் தழுவிக் கொண்ட வீரவேங்கை தர்ஷினி (வனிதா - கந்தசாமி வாழைச்சேனை) கப்டன் மணாளன் (சண்முகநாதன் - ஸ்ரீதர் - சுழிபுரம்) ஆகியோரது புகழுடலுக்கு மக்கள் அஞ்சலிக்காக நவாலி பரமதேவா இடம் பெயர்ந்தோர் முகாமில் வைக்கப்பட்டு அஞ்சலிக் கூட்டமும் இடம் பெற்றது.

## சித்தி

நெல்லியடி மத்திய மகா வித்தியாலய உப அதிபர் திரு. கே. நடராஜா யாழ்.பல்கலைக்கழகத்தினால் நடாத்தப்பட்ட கல்வியியல் துறை முதுகலைமாணிப் பரீட்சையில் சித்தியடைந்துள்ளார். (11,

## பாதிப்பு

நாட்டில் வறட்சியால் 5 இலட்சம் குடும்பங்கள் பாதிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது

## திட்டம்

அன்னாசிச் செய்கை மூலம் வருடாந்தம் 250 கோடி ரூபா வருமானம் ஈட்டத் திட்டம் வகுக்கப்படவுள்ளது.

# கடும் வறட்சியால் பூநகரி மக்கள் பெரிதும் பாதிப்பு

தற்போது நிலவும் கடும் வறட்சியால் பூநகரியில் உள்ள செட்டியகுறிச்சி செல்லையா தீவு, ஆலங்கேணி, நல்லூர் போன்ற பகுதிகளில் குடிதண்ணீருக்கு பெரும் தட்டுப்பாடு நிலவுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இப் பகுதிகளில் உள்ள கூடுதலான நன்னீர் கிணறுகள் கடும் வறட்சியால் வற்றியிருப்பதால் குடி தண்ணீருக்கு தட்டுப்பாடு நிலவுவதோடு குளங்களிலும் தண்ணீர்வற்றியிருப்பதால் கால்நடைகள் கூட தண்ணீர் இன்றி அலைந்து திரிவதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (47)

# சென்தோமஸ் அணி வெற்றியீட்டியது

யாழ். மாவட்ட விளையாட்டு அபிவிருத்திக் குழுவினால் நடாத்தப்படும் உதைபந்தாட்டப் போட்டித் தொடரில், நேற்று முன்தினம் கிந்தவரோதயக் கல்லூரி மைதானத்தில் இடம்பெற்ற உதைபந்தாட்டப் போட்டியில் சென்தோமஸ் விளையாட்டுக்கழக அணி அதனை எதிர்த்து ஆடிய யங்ஹென்றியன் அணியை ''ரைபிரேக்கரில்'' 4: 3 என்ற கோல்கள் கணக்கில் வென்றது.

இப்போட்டிக்கு நடுவராக எம். பிறான்சிசும் உதவி நடுவர்களாக ஜீ எம், செயசிங்கம்பிள்ளை, ரீ கருணாகரன் ஆகியோரும் கடமையாற்றினார்கள். (16)

# தெஹியோவிற்ற பகுதியிலும் தேயிலைத்தோட்டம் பாதிப்பு

தெஹியோவித்தப் பகுதியில் உள்ள தேயிலைத் தோட்டங்களும் தற்போதைய கடும் வறட்சியால் பாதிக்கப்பட்டுள்ளன எனத் தெரிவிக்கப்படுகிறது.

சுமார் 2000 ஏக்கர் தோட்டம் வறட்சியால் பாதிக்கப்பட்டுள்ளது.

இதேபோல இங்குள்ள மரக்கறித் தோட்டங்களும் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளன. (47)

# கொழும்பை மீண்டும் உலுக்கியது அந்த மர்மக் குண்டு ஒலி

கொழும்பு தெற்கில் நேற்று முன்தினம் காலை மீண்டும் எழுந்த மர்மக்குண்டு ஒலி பெரும் பரபரப்பைத் தோற்றுவித்ததாகத் தெரிவிக்கப்படுகிறது.

இப்பகுதியில் நேற்று முன்தினம் காலை விட்டு விட்டுக் கேட்ட மர்ம ஒலிக்குக் காரணம் நவீன சுப்பர் சோனிக் ஜெட் விமானமே என்று பத்திரிகையாளர்களிடம் தெரிவிக்கப்பட்டது.

ஜனாதிபதியின் சர்வதேச விவகார ஆலோசகர் பிரட்மன் வீரக்கோன், விமானப் படை விங் கொமாண்டர் விஜிததென்னக்கோன் மற்றும் அதிகாரிகள் ஆகியோர் குறித்த மர்மஒலிகள் பற்றி விளக்கமளித்தனர் எனவும் கொழும்புத் தகவல்கள் தெரிவித்தன.

விமானப் படை புதிதாகக் கொள்வனவு செய்துள்ள இந்த நவீன ஜெட் விமானம் பயிற்சியில் ஈடுபட்டிருந்தபோது ஏற்பட்ட அதிர்வுகளின் ஒலிகளே நேற்று முன்தினமும் கேட்டதாக இவர்கள் விளக்கினர்.

சீன விமானிகள் பயிற்சி அளிப்பதில் ஈடுபட்டுள்ளனர் என்றும் தெரிவிக்கப்பட்டது.

கடந்த சில தினங்களுக்கு முன்னரும் இத்தகைய ஒலிகள் எழுந்து கொழும்பு நகரைப் பெரும் பீதிக்குள்ளாக்கியது தெரிந்ததே.

## ஏப். 5 முதல் 15 வரை சூரியன் இலங்கைக்கு மேல்!

சூரியன் ஏப்ரல்மாதம் 5 ஆம் திகதி முதல் மீண்டும் நேர் உச்சிக்கு வருகிறது என்று தெரிவிக்கப்படுகிறது.

இவ்வருடம் வடதிசையிலான நகர்வின்போது சூரியன் இலங்கைக்கு மேலே நேர்உச்சிக்கு வரும் இடங்களையும், நாள்களையும் வளிமண்டல ஆராய்ச்சித் திணைக்களம் அறிவித்துள்ளது.

ஏப்ரல் 5 ஆம் திகதி முதல் 15 ஆம் திகதி வரையிலான காலப்பகுதியில் சூரியன் இலங்கைக்கு மேலே நிலை கொள்ளும் எனத் தெரிவிக்கப்படுகிறது.

# மாஜி டி. ஐ. ஜி. மாயமாக மறைவு என்கிறார் ஐ. ஜி. பி. பெரேரா!

முன்னாள் பிரதிப்பொலிஸ் மா அதிபர் உடுகம்பொல வைக் காணவில்லை என்று அறிவிக்கப்படுகிறது.

"அவரைக் காணவில்லை, நாம் தேடுகிறோம்" என்று பொலிஸ் மா அதிபர் ஏர்னஸ்ட் பெரேரா தெரிவித்துள்ளார்.

ஜே. வி. பி க்கு எதிரான நடவடிக்கைகளின்போது கடும் விமர்சனத்துக்கு உள்ளான உடுகம்பொல கட்டாய லீவில் அரசினால் அனுப்பப்பட்டிருந்தார் என்பதும்; மனிதஉரிமை மீறல் குற்றச்சாட்டு பலவழிகளிலும் அவரை எதிர்நோக்கியது என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது.

## இந்திய எல்லையில் ஊடுருவிய 40 இலங்கை மீனவர்

இந்தியக் கடற்பரப்பில் மீன்பிடிக்கையில் கண்டுபிடிக்கப்பட்ட சுமார் 40 மீனவர்கள் கடந்த மூன்று மாதங்களாக இந்தியாவில் காவலில் உள்ளனர்.

இத்தகவலை மீன்பிடித்துறை அமைச்சர் ஜோசெப் மைக்கல் பெரேரா நேற்று முன்தினம் கொழும்பில் நடைபெற்ற பத்திரிகையாளர் மாநாட்டில் தெரிவித்தார்.

## பரிசளிப்பு விழா

தென் புலோலி புற்றளை மகா வித்தியாலய பரிசளிப்பு விழா வித்தியாலயத்தில் அதிபர் திரு. யோதவா தலைமையில் நடைபெற்றது.

உப-அதிபர் திரு எஸ் ஜெயவீரசிங்கம் வரவேற்புரை நிகழ்த்தினார்.

யாழ். பிராந்திய கல்விப் பணிப்பாளர் திரு ஆர். சுந்தரலிங்கம் பிரதம விருந்தினராகவும், வடமராட்சி கோட்டப் பிரதிக் கல்விப் பணிப்பாளர் திரு. எஸ். செல்லத்துரை சிறப்பு விருந்தினராகவும் கலந்துகொண்டனர். திருமதி தேவராணி சுந்தரலிங்கம் பரிசில்களை வழங்கினார். மாணவ, மாணவிகளின் கலை நிகழ்ச்சிகளும் இடம்பெற்றன. (11)

## அபிவிருத்தி நடவடிக்கை பற்றி விரிவான ஆராய்வு

மந்திகை அரசினர் வைத்தியசாலையின் அபிவிருத்தி நடவடிக்கைகள் பற்றிய வைத்தியசாலை அபிவிருத்திச் சபையின் முக்கிய கூட்டமொன்று மாவட்ட வைத்திய அதிகாரியின் அலுவலகத்தில் மாவட்ட வைத்திய அதிகாரி டாக்டர் எஸ் கதிரவேற்பிள்ளை தலைமையில் நடைபெற்றது.

இக்கூட்டத்திலே தமிழீழ காவல்துறை வடமராட்சி உதவிப் பொறுப்பாளர் திரு. ரஞ்சித்குமார், பிராந்திய வைத்திய சேவைக்குழு இணைப்பதிகாரி திரு. எஸ். சேவியர், விடுதலைப் புலிகளின் வைத்தியசாலை மருத்துவப் பகுதிப் பொறுப்பாளர் திரு. சஞ்சீவன் உட்பட இன்னும் பலர் கலந்து கொண்டனர்.

இக்கூட்டத்திலே வைத்தியசாலையின் அபிவிருத்திகள் பற்றி விரிவாக ஆராயப்பட்டன. வைத்தியசாலையின் அபிவிருத்திக்கு வேண்டிய பூரண ஒத்துழைப்புகளையும் உதவிகளையும் வழங்கத் தாம் தயாராக இருப்பதாக கூட்டத்தில் கலந்துகொண்டோர் உறுதியளித்தனர். 11

## ‘சத்தியவான் சாவித்திரி’

‘விருட்சம்’ சஞ்சிகை வெளியீட்டின் பொருட்டு எதிர்வரும் திங்கட்கிழமை மாலை 5. 30 மணிக்கு மருதனாமடம் இராமநாதன் கல்லூரியில் வணிக முகாமைத்துவ மாணவர் மன்றத்தால் ‘சத்தியவான் சாவித்திரி’ நாடகம் மேடையேற்றப்படவுள்ளது.

## விடுதலைப்புலிகள் வெற்றியீட்ட திருத்தலப் பாதயாத்திரை

இனத்தின் விடிவு வேண்டி, சத்துருக்களின் தீமையைத் தீய்த்து அதற்கோர் முடிவுகட்டிடப் போராடும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு வெற்றி இட்டவும், போர்க்காலத் துன்பம் நீங்கி இன்பம் பொங்கவும் எதிர்வரும் பங்குனித் திங்கள் மூன்றாம் கிழமை (30 - 3 - 92) அச்சுவேலி தீர்த்தாங்குளம் பிள்ளையார் ஆலயத்திலிருந்து திருத்தல யாத்திரை ஒன்று பழம்பெரும் பெருமைமிக்க மட்டுவில் பன்றித்தலைச்சி அம்மன் ஆலயம் நோக்கி நடைபெற ஏற்பாடாகியுள்ளது.

தீர்த்தாங்குளம் பஜனைக்குழுவினர் இதற்கு சகலரதும் ஒத்துழைப்பினைக் கோரியுள்ளனர்.

## உடன்படிக்கை

இந்தியாவும் உக்ரெய்னும் நட்புறவு உடன்படிக்கை ஒன்றில் கைச்சாத்திட்டுள்ளன.

இந்தியப் பிரதமரும் உக்ரெய்ன் ஜனாதிபதியும் இதில் கைச்சாத்திட்டனர்.

## மீண்டும் நோய் நிலை

சற்றே தணிந்திருந்த வயிற்றோட்டம் மற்றும் காய்ச்சல் போன்ற நோய்கள் குடாநாட்டின் பல பகுதிகளிலும் வேகமாக மீண்டும் பரவிவருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

தற்போது நிலவும் அதிகரித்த உஷ்ணநிலை உடல்நிலைப் பாதிப்பை ஏற்படுத்தி வருகிறது.

## விலங்குகளை அன்புடன் நடத்தப் பயிற்சித் திட்டம்

விலங்குகளை அன்புடன் நடத்துவது பற்றிய பயிற்சியை இந்திய விலங்குகள் நலவாரியம் நடத்தவுள்ளது. விலங்குகளைத் துன்புறுத்தலினைத் தடுப்பதற்கான பிரிட்டிஷ் சங்கத்தின் உதவியுடன் இது நடத்தப்படவுள்ளது.

## ‘கம்பரும் நாவுக்கரசரும்’

‘கம்பரும் திருநாவுக்கரசரும்’ என்ற தலைப்பில் கருத்தரங்கு ஒன்றில் உரையாற்றிய தமிழகத்தைச் சேர்ந்த டாக்டர் விஜயலக்சுமி நவநீதகிருஷ்ணன் பின்வருமாறு சொன்னார்: ‘நாவுக்கரசர் தந்தி அடிக்கிற மாதிரி எதையும் நறுக்கா நாலு வரியில் சொல்லி விடுவார். ஆனால் கம்பருக்கு எந்த ஒரு விஷயத்தைச் சொல்ல வேண்டுமானாலும் முப்பது முப்பத்தைந்து பாட்டாவது இல்லையென்றால் முடியாது. நாம் யாரையாவது விளித்து ‘என்ன ஊரிலிருந்து எப்போது வந்தீர்கள்?’ என்று கேட்டால் ‘நேற்று’ என்று நாவுக்கரசர் சொல்லி விடுவார். ஆனால் கம்பர் அப்படியில்லை. ‘அட அதனைக் கேட்கிறீர்களா? சென்ற வாரத்திலிருந்து வர வேண்டும், வரவேண்டும் என்று நினைத்துக் கொண்டிருந்தேன். ரயில் எதிலும் டிக்கெட் கிடைக்காமல் பின் தெரிந்தவர் ஒருவர் மூலமாக டிக்கெட் வாங்கி இங்கே வந்தால் வீட்டுக்கு வரும் கடைசி பஸ்ஸும் போய்விட்டது. ஆட்டோவும் ஸ்ட்ரைக்காம். அதன்பின் ஒரு குதிரைவண்டி பிடித்து வந்து சேர்வதற்குள்...’ என்று விஷயத்துக்கு வரவே ஒரு இருபது பாட்டுக்களாவது வேண்டும்”.

இதனைத் தமிழக இதழ் ஒன்று வெளியிட்டுள்ளது.

## ரஷ்யப் போர் விமானங்கள் வீழ்ந்து நொறுங்கின

பயிற்சியில் ஈடுபட்டிருந்த இரண்டு ரஷ்யப் போர் விமானங்கள் விழுந்து நொருங்கின. இரு விமானமோட்டிகளும் மரணமாகினர்.

இவர்களது சடலங்களும் விமானத்தின் சிதைவுகளும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

## தெரிவுக்குழு அறிக்கை மே அல்லது ஜூனிலேயே பூர்த்தி

இனப்பிரச்சினை தொடர்பாக நியமிக்கப்பட்டுள்ள பாராளுமன்றத் தெரிவுக்குழுவின் அறிக்கை எதிர்வரும் மே இறுதியில் அல்லது ஜூனில்தான் தயாரித்து முடிக்கப்படும் என்று குழுவின் முக்கிய உறுப்பினர் ஒருவர் தெரிவித்தார்.

# செய்தி உலகம்

### ஜப்பான்

‘அக்யூ பஞ்சர்’ எனப்படும் சீன வைத்திய முறையை நவீனமயப்படுத்தி திடீர் தலைவலி, மூட்டுவலி போன்று உடலில் ஏற்படும் வலிகளுக்கு உடன் நிவாரணம் அளிக்கக்கூடிய கைக்கு அடக்கமான ‘எலக்ட்ரோ வேர்’ என்ற எலக்ட்ரோனிக் சாதனத்தை ஜப்பானிய மருத்துவர்கள் உருவாக்கியுள்ளார்கள்.

இதில் ஊசி கிடையாது. எங்கே வலி உள்ளதோ அந்த இடத்தில் இச்சாதனத்தை வைத்து வைத்து எடுத்தால்போதும் வலி பறந்து போய்விடும். இதைப் பயன்படுத்துவதால் நோய் குணமாவது மாத்திரமல்லாது கெடுதல் ஏதும் ஏற்படாது என்றும் இதனை உருவாக்கிய மருத்துவ நிபுணர்கள் கூறுகிறார்கள்.

### ஜேர்மனி

கடந்த 60 ஆண்டுகளில் ஜேர்மனி ஏகப்பட்ட தொழிற்சாலைகளைக் கட்டி வளமான நாடாக உயர்ந்துள்ளது. ஆனால் இந்தத் தொழிற்சாலைகள் வெளியிடும் கழிவுப் பொருள்களினால் இந்நாட்டின் நிலம், நீர், காற்று ஆகியன தூய்மையற்றுப் போய்விட்டன. அதனால் இதற்குப் பரிகாரம் காண ஜேர்மன் அரசு பொதுமக்களிடம் இருந்து ஆலோசனைகளைக் கேட்டிருப்பதுடன், நடைமுறைப்படுத்தக்கூடிய அதே சமயம் அதிகம் பணச்செலவு இல்லாத ஆலோசனைகளைத் தெரிவிப்பவர்களுக்குத் தகுந்த சன்மானம் அளிக்கப் போவதாகவும் அறிவித்துள்ளது.

### இந்தியா

வெப்ப மண்டல நாடுகளில் வாழ்வோருக்கு "ஸ்பாஸ்டிக் பாரா பெரிசிஸ்" என்று கூறப்படும் முடக்குவாத நோய் ஏற்படுவதற்கு" எச். டி. எல் வி"-1 என்னும் வைரஸ் கிருமிதான் காரணம் என்பதைப் பல வருட கால ஆராய்ச்சியின் பின் இந்திய டாக்டரான சத்தியராம் பகவதி என்பவர் கண்டுபிடித்துள்ளார். இதற்காக இவரைப் பாராட்டி உலகப் புகழ்பெற்ற மருத்துவப் பத்திரிகையான ‘நியூ இங்கிலண்ட் ஜேணல் ஒஃப் மெடிசின்’ ஒரு தலையங்கத்தையே தீட்டியுள்ளது.

### சீனா

சீனாவில் 1988 ஆம் ஆண்டு மக்கள் தொகை 101 கோடியாகும். வருடத்திற்கு 140 இலட்சம் குழந்தைகள் பிறப்பதால் கி. பி. 2 ஆயிரமாம் ஆண்டில் 102 கோடி பேர் சீனாவில் வசிப்பார்கள் என்று கணக்கிட்டார்கள். ஆனால் சமீபத்தில் சீனாவில் மேற்கொள்ளப்பட்ட குடிசன மதிப்பீட்டில் 102 கோடியைப் பிடிப்பதற்கு இன்னும் ஒரு சில இலட்சங்களே குறைவாக இருப்பதாகவும் 1995 ஆம் ஆண்டில் அத்தொகையை எட்டிவிடுவர் என்றும் தெரிவிக்கப்படுகிறது. (16)

## அரும்பொருளாகப்பேணப்படும் அந்த இரத்தக் கடிதம்

பிரான்ஸ் நாட்டை 1614 ஆம் ஆண்டு தொடக்கம் 1664 ஆம் ஆண்டு வரை ஆண்ட 'டியூக் ஹென்றி டிலைன்' என்ற அரசன் அனிதகான்ஸ் என்ற ஒரு சாதாரண பெண்ணுக்கு தனது காதலைத் தெரிவித்து தனது இரத்தத்தால் எழுதிய 12 கடிதங்களை மாதம் ஒரு கடிதம் என்ற வீதத்தில் அனுப்பிவந்தான்.

முதலில் அரசனின் காதலை ஏற்றுக்கொள்ளத் தயக்கம் காட்டிய அப்பெண் ஈற்றில் அவன் காதலை ஏற்றுக்கொண்டாள். ஆனால் அரசன் ஏதோ காரணத்தினால் அவளை மணக்கவில்லை.

அனிதகான்ஸின் வழித்தோன்றல்களில் ஒருத்தியான அனியூலியத் என்ற பெண் அரசனால் எழுதப்பட்டதாக நம்பப்படும் 12 கடிதங்களை பிரான்ஸில் உள்ள அரும் பொருள் காட்சிச் சாலைக்கு அண்மையில் வழங்கியுள்ளார். (16)

## புதிய நடைமுறையால் வாடிக்கையாளர் பாதிப்பு

பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களினால் நிர்வகிக்கப்படும் கிராமிய வங்கிகள் தங்கள் காசோலைகளை வங்கியில் வைப்பிடச் சென்ற பொழுது மக்கள் வங்கி அக்காசோலைகளை ஏற்க மறுத்ததாகத் தெரியவருகிறது.

கூட்டுறவு உதவி ஆணையாளர் புதிய நடைமுறையைப் பின்பற்றுமாறு பணித்துள்ளதினால் இவ்விதம் வங்கி மறுத்துள்ளதாகக் கூறப்படுகிறது.

புதிய நடைமுறையின் பிரகாரம் வைப்பிலிடப்படும் அல்லது மாற்றப்படும் காசோலைகள் கூட்டுறவு அபிவிருத்தி உத்தியோகத்தர்களால் உறுதிப்படுத்தப்பட வேண்டும்.

இந்நடைமுறையினால் வாடிக்கையாளர்கள் பெரிதும் பாதிப்புக்கு உள்ளாகியுள்ளார்கள் எனவும் தெரிவிக்கப்படுகிறது. 16

* அனல் மின்னுக்கு நாளொன்றுக்கு ஒரு கோடி
* தெரு விளக்குகளை அணைக்கப் பணிப்பு

## கொத்மலை மின் நிலையம் நீரின்றி மூடப்பட்டுள்ளது

தற்போது அதிகரித்து வரும் கடும் வறட்சியினால் கொத்மலை நீர்த்தேக்கம் முற்றாக வற்றியுள்ளதாகவும் இதனால் கொத்மலை மின் உற்பத்தி நிலையம் மூடப்பட்டு விட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இதனிடையே இன்னமும் இரு வாரங்களுக்கே நீர் மின் வழங்கக் கூடியதாக இருக்கும் எனவும் இதனால் தற்போது அனல் மின் நிலையங்கள் இயக்க வைக்கப்பட்டுள்ளதாகவும் மின் சக்தி எரிபொருள் துறையமைச்சு அறிவித்துள்ளது. அனல் மின் நிலையம் இயக்க அரசு நாளொன்றுக்கு ஒரு கோடி ரூபாவை செலவு செய்வதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

அமைச்சு உள்ளூராட்சி அதிகாரிகளுக்கு விடுத்த பணிப்பொன்றில் வீதி விளக்குகளில் ஒன்றுவிட்ட ஒன்றை அணைத்து மின் விரயத்தைத் தடுக்குமாறும், ஹோட்டல்கள் அலுவலகங்கள் தமது குளிரூட்டிகளை இயக்குவதை குறைக்குமாறும் கோரிக்கை விடப்பட்டுள்ளது.

## கிளிநொச்சியில் நெல் விலையில் மேலும் வீழ்ச்சி

கிளிநொச்சிப்பகுதியில் நெல்லின் விலையில் மேலும் பெரும் வீழ்ச்சி ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இதனால் இப்பகுதியில் ஒரு நெல் மூடை 525 ரூபாவாக விற்பனையாவதாகவும் கிளிநொச்சிப் பகுதிக்கு வர்த்தகர்கள் பலர் சென்று நெல் மூடைகளைக் கொள்வனவு செய்து வருவதாகவும் மேலும் தெரிவிக்கப்பட்டது. 47

### பின்போடப்பட்டது

நாளை ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் நடைபெறவிருந்த வட்டுக்கோட்டை இந்துக்கல்லூரி பழைய மாணவர் சங்க அங்குரார்ப்பணக் கூட்டம் காலவரையறையின்றி பின்போடப்பட்டுள்ளது. 18

## வவுனியாவில் இந்து-முஸ்லிம் நடமாடும் அலுவலகங்கள்

ஜனாதிபதி நடமாடும் அலுவலக சேவைக்கு முன்னோடியாக நடைபெறும் அமைச்சுக்களின் நடமாடும் அலுவலக சேவைகளின் கீழ், கலாசாரத் தகவல் அமைச்சின் நடமாடும் அலுவலக சேவை மார்ச் 28ஆம் திகதி வவுனியாத் தமிழ் மகாவித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது.

முஸ்லிம் சமய கலாசார ராஜாங்க அமைச்சர் அஸ்வர், இந்துசமய கலாசார அமைச்சர் பி.பி. தேவராஜ் ஆகியோர் தத்தம் அதிகாரிகள் சகிதம் இதில் கலந்து கொள்வர் என்று தெரிவிக்கப்படுகிறது.

## பேச்சுப் போட்டியில் பரிசு பெற்றோர் விவரம்

யாழ். மாவட்ட சனசமூக நிலையங்களின் சம்மேளனம் நடத்திய பேச்சுப் போட்டி யாழ். வேம்படி மகளிர் கல்லூரியில் இடம்பெற்ற பொழுது பரிசு பெறத் தெரிவுசெய்யப்பட்டுள்ளோர் விவரம்:-

பாலர் பிரிவு 'ஏ' 1 ரீ யாழினி, 2 ஜே நிரோசினி, 3- ஏ. கவிதசரன், பாலர் பிரிவு 'பி' 1, நாகேந்திரன் ராஜலக்ஷ்மன், 2, ஆர். கனகசிங்கம், என். இராமசந்திரன், கீழ்ப்பிரிவு 1, எம். பிரதீபன், 2. உ பிரேமராசா, 3, எஸ கோமனா

மேற்பிரிவு 1. வி. வினோதினி, 2, சண்முகதாஸ், 3 எம் வசந்தகுமாரி. மத்திய பிரிவு 1, எமிரன், 2, நெல்சன், எஸ சிறீசந்திரநாவணியா, அதிமேற்பிரிவு 1, எம் புவனேஸ்வரன். 2, ஆர், தங்கராசா 3, எம். அருமைலிங்கம். (16)

## அகதிகளை மீள அனுப்புவதில் துரிதம் காட்டுவதென ஸ்ரீலங்கா இந்தியா தீர்மானம்!

ஸ்ரீலங்கா அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க நேற்று முன்தினம் இந்தியப் பிரதமர் பி.வி. நரசிம்மராவைச் சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்தினார்

அகதிகளை மீண்டும் தாயகத்துக்கு அனுப்புவதினைத் துரிதப்படுத்துவதென இருவரும் ஒப்புக்கொண்டனர் எனப் புதுடில்லி வட்டாரங்கள் நேற்றுத் தெரிவித்தன.

இரு தரப்புப் பொருளாதார ஒத்துழைப்பும் பற்றியும் இருவரும் கருத்துப்பரிமாறியதாகவும் தெரிவிக்கப்பட்டது.

இதன்பயத்தில் ஸ்ரீலங்கா ஆர்வம் கொண்டுள்ளதாக அமைச்சர் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

## சட்டசபைக் காவலரை தாக்கிய தாமரைக்கனி

தமிழக சட்டசபையில் சுயேச்சை உறுப்பினரான தாமரைக்கனி நடப்புக் கூட்டத் தொடரில் எஞ்சிய நாள்களில் கலந்து கொள்ளக் கூடாதென சபாநாயகர் உத்தரவிட்டுள்ளார்.

விவாதம் ஒன்று நடைபெறுகையில் குறுக்கிட்டுப் பேசிய அவரைப் பல முறை எச்சரித்தும் அவர் கேட்காததால் வெளியேற்றப்பட்ட போது காவலர் ஒருவரைத் தாக்கியதாகவும் நேற்றுத் தெரிவிக்கப்பட்டது.

## மந்திகை வைத்தியசாலைக்கு ஜெனரேற்றர் வழங்க ஏற்பாடு

மந்திகை அரசினர் ஆதார வைத்தியசாலை சத்திர சிகிச்சை நிலையத்திற்கு வைத்தியசாலை அபிவிருத்திச்சபை புதிய ஜெனரேற்றர் ஒன்றை வழங்கவுள்ளது.

பிரான்ஸ வைத்தியசேவைக் குழுவினர் கப்பலில் இந்த ஜெனரேற்றரைக் கொழும்பிலிருந்து பருத்தித்துறைக்குக் கொண்டு வருவதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளதாக மந்திகை அரசினர் வைத்தியசாலை பிரான்ஸ வைத்திய சேவைக்குழு இணைப்பதிகாரி திரு எஸ். சேயர் தெரிவித்துள்ளார்.

இவ்வைத்தியசாலை சத்திர சிகிச்சை நிலையத்திலுள்ள ஜெனரேற்றர் பழுதடையும் நிலையில் இருப்பதனால் இச்சத்திரசிகிச்சைநிலையத்திற்கு புதிய ஜெனரேற்றர் ஒன்று அவசியம் தேவைப்படுகின்றது. இந்த ஜெனரேற்றரை வைத்தியசாலை அபிவிருத்திச் சபையின் பணத்தில் பிரான்ஸ் வைத்திய சேவைக் குழு கொழும்பில் கொள்வனவு செய்துள்ளது.

இந்த ஜெனரேற்றரைக் கொள்வனவு செய்வதற்கென வைத்தியசாலை அபிவிருத்திச் சபை 40,000 ரூபாவை ஒதுக்கீடு செய்து வழங்கியது. வெகு விரைவில் இந்தப் புதிய ஜெனரேற்றர் கப்பல் மூலம் கொண்டு வரப்படும் என்று பிரான்ஸ் வைத்திய சேவைக் குழுவினர் தெரிவித்துள்ளனர். (11)

## லிபியாவின் முறையீடு பற்றி சர்வதேச நீதிமன்று விசாரணை

1988 இல் நிகழ்ந்த விமானக் குண்டுவைப்புச் சம்பவம் தொடர்பான இருலிபிய நாட்டவரை விசாரணைக்கு ஒப்படைக்கக் கோரி ஸ்கொட்லண்ட் யாட்டிலோ, அமெரிக்காவிலோ விசாரணை செய்ய வேண்டும் என்று பிரிட்டனும், அமெரிக்காவும் முயற்சி செய்வதைத் தடுக்க வேண்டும் என்ற லிபியாவின் கோரிக்கைபற்றி சர்வதேச நீதிமன்றம் விசாரணையைத் துவக்கியுள்ளது.

மேற்படி சம்பவத்தில் லிபியா சம்பந்தப்பட்டிருக்கவில்லை என்று பிரஸல்ஸுக்கான லிபியத் தூதுவர் அப்டோரி கூறியுள்ளார்.

பிரிட்டனும், அமெரிக்காவும் தன்னிச்சையான, சட்ட விரோதமான மிரட்டல் முயற்சியில் ஈடுபட்டுள்ளதாகவும் அவர் கூறினார்.

## ஐ.நா. பிரதிநிதி பர்மா பங்களாதேஷ் செல்வார்

பர்மாவிலிருந்து பெருமளவு அகதிகள் வெளியேறுவது குறித்து ஆராய ஐ.நா. பிரதிநிதி ஒருவர் பர்மாவுக்கும், பங்களாதேஷுக்கும் செல்லவுள்ளார்.

பங்களாதேஷுக்குப் பர்மாவிலிருந்து வந்துள்ள அகதிகளின் எண்ணிக்கை இரண்டு லட்சமாகும்.

இருநாட்டு எல்லைப்புறத்திலும் பதற்றம் நிலவுவதாகவும் தெரிவிக்கப்பட்டது.

## இலங்கைச்சிறுவர் பெறும் பரிசு

இந்தியத் தலைநகர் புதுடில்லியில் நடைபெற்ற சங்கர் போட்டியில் இலங்கைச் சிறுவர்கள் 46 பேருக்குப் பரிசுகள் கிடைத்துள்ளன.

சங்கர் சர்வதேசக் குழந்தைகள் போட்டியில் இவர்கள் வெற்றியீட்டினர்

இவற்றில் இரண்டு ஜவகர்லால் நேரு பரிசுகளாகும்.

## பிறப்பு அத்தாட்சிப் பத்திரம் வழங்கும் நடவடிக்கை

பருத்தித்துறை மேலதிக மாவட்டப் பதிவாளர் (காணிப்பதிவு) அலுவலகத்தில் பிறப்பு அத்தாட்சிப் பத்திரங்கள் வழங்கும் நடவடிக்கைகள் நடைபெற்று வருகின்றன.

1988, 1989, 1990 ஆம் ஆண்டுகளில் பிறப்பு அத்தாட்சிப் பத்திரங்கள் பெறுவதற்கென சுமார் 8000 விண்ணப்பங்கள் விண்ணப்பிக்கப்பட்டு அவை வழங்கப்படாமல் இருந்து வந்துள்ளதாகவும், விண்ணப்பித்து பிறப்பு அத்தாட்சிப் பத்திரங்களைப் பெறாதவர்கள் அலுவலகத்துடன் தொடர்பு கொண்டு பெற்றுக் கொள்ளலாமெனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (11)

## கிணற்று நீரில் விஷம் 50 பேர் ஆஸ்பத்திரியில்

மதுரை மாவட்டத்தைச் சேர்ந்த 50 பேர் திடீர் வயிற்றுப் போக்குக் காரணமாக மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

அங்குள்ள கிணறொன்றில் தண்ணீர் குடித்ததனையடுத்து அவர்களுக்கு இந்நோய் ஏற்பட்டதாக அதிகாரிகள் தெரிவித்தனர்.

அப்பகுதியில் உள்ள 1500 பேருக்குத் தடுப்பூசி போடப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது

கிணற்று நீரில் விஷம் கலக்கப்பட்டிருக்கலாம் எனச்சந்தேகிக்கப்படுகிறது.

## அல்பாத் தலைவர் நிபந்தனை

அஸாம் கிளர்ச்சியாளர் (அல்பா) குழுவின் தலைவர் தம் நிலைப்பாடுபற்றி தெளிவுபடுத்தியுள்ளார்

பேச்சுவார்த்தை ஆரம்பிக்கப்படும் வரை ஆயுதங்கள் கீழே வைக்கப்படமாட்டாது என்று அவர் தெரிவித்துள்ளார்.

காணாமற்போனவர்கள் தொடர்பாக

## நாகபட்டினம் மீனவர்கள் ஹர்த்தால் அனுஷ்டிப்பு

நாகபட்டினத்திலிருந்து கடலுக்குச் சென்று காணாமற்போன மீனவர்களை கண்டுபிடித்து தருமாறு நேற்று அப்பகுதி மீனவர்கள் ஹர்த்தால் அனுஷ்டித்தனர்.

இதேவேளை இரு தினங்களுக்கு முன் கோடிக்கரையில் கரையொதுங்கிய சடலங்கள் காணாமற்போன மீனவர்கள்தான் என்பது அறிய இரசாயன பரிசோதனைக்கு அனுப்பப்பட்டுள்ளது எனத் தெரிவிக்கப்பட்டது.

காணாமற்போன மீனவர்கள் ஸ்ரீலங்கா கடற்படையினால் தாக்கப்பட்டிருக்கலாம் என குற்றஞ்சாட்டப்படுவது தெரிந்ததே.

● லீவர் பிரதேர்ஸில் பொருள்களை வாங்காது

## தனியாரிடம் கொள்வனவு சங்கங்களுக்கு லாபம் இழப்பு

யாழ் மாவட்டத்தில் உள்ள சில பல நோ. கூ. சங்களின் லீவர் பிரதேர்ஸ் ஸ்தாபனத்தின் கணக்குகள் மூடப்பட்டுள்ளன.

இச்சங்கங்கள் லீவர் பிரதேர்ஸ் ஸ்தாபனத்திலிருந்து நீண்ட காலமாக நேரடியாகவே சவர்க்காரம் மற்றும் அதன் உற்பத்திப் பொருள்களை கொள்வனவு செய்யாததே கணக்குகள் மூடப்பட்டதற்கு காரணமாகும்.

கொழும்பிலுள்ள தனியார் வர்த்தகர்களிடம் லீவர் பிரதேர்ஸ் உற்பத்திப் பொருள்களை இச்சங்கங்கள் பெற்று வருகின்றன.

இதனால் லீவர் பிரதேர்ஸ் ஸ்தாபனம் கூட்டுறவுச் சங்கங்களுக்கு வழங்கும் விற்பனைக்கழிவு, பொருள்களைக் கொண்டு செல்லும் போக்குவரத்துச் செலவு என்பவற்றை இச்சங்கங்கள் இழந்துள்ளதாக கொழும்புச் செய்திகள் தெரிவிக்கின்றன. 45

## பட்டியல் நிராகரிப்பு புதிய பட்டியல் கோரிக்கை

யாழ் செஞ்சிலுவைச் சங்கத்தின் நல்லூர் பிரிவு சமர்ப்பித்த 30 பேர் கொண்ட பிரதிநிதிகள் பட்டியலில் இச் சங்கத்தின் தலைவர் பொருளாளர் ஆகியோரது பெயர்கள் இடம் பெறவில்லை

இவர்களது பெயர்களை சேர்க்காதபடியால் அப்பட்டியலை நிராகரிப்பதாகவும் தேர்தல் நடைபெறும் 29ஆம் திகதி ஞாயிறு காலை 9 மணிக்கு முன் அவர்களது பெயர்களை உள்ளடக்கிய பட்டியல் ஒன்றை சமர்ப்பிக்கும்படி வற்புறுத்தி யாழ் செஞ்சிலுவைச் சங்கதலைவர் நல்லூர் பிரிவுக்கு கடிதம் எழுதியுள்ளார்

## போதைவஸ்து வழக்கில் தமிழருக்குமரணதண்டனை

ஒரு கிலோ ஹிரோயின் போதைவஸ்து வைத்திருந்த தான குற்றச்சாட்டின் மீது செல்வநாதன் சுந்தரராஜன் (35) என்ற இளைஞருக்கு கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி டீ. பி வீரசூரியா மரணதண்டனை விதித்தார்.

இதேபோல இக்பால் (28) என்ற இளைஞருக்கு இக்குற்றச்சாட்டின் மீது ஆயுள் சிறைத்தண்டனை விதித்து தீர்ப்பளிக்கப்பட்டது.

### வீரச்சாவு

கடந்த 21ஆம் திகதி நெசசிமோட்டையில் நடைபெற்ற மோதலில் காயமடைந்த அகிலன் (சூரியகுமார்) வீரச்சாவு எய்தினார்

### அகதி மாணவருக்கும் விசேட பரீட்சை

யாழ்மாவட்டத்தில் இருந்து இடம்பெயர்ந்த மாணவர்களுக்கு கொழும்பு, வவுனியா, செட்டிகுளம் போன்ற பகுதிகளில க. பொ. த. உயர்தரப் பரீட்சையில தோற்றுவதற்கான ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது 47

## அசாருதீன் தகுதியற்றவர் மனோஜ்பிரபாகர் கண்டனம்

உலகக்கோப்பைக்கிரிக்கெட் தொடரில் இந்திய அணி படுதோல்வி அடைந்தமைக்கு காரணம் அணி கப்டன் அசாருதீனிடம் சிறந்த தலைமைத்துவம் இல்லாமையே என வேகப்பந்து வீச்சாளர் மனோஜ பிரபாகர் கண்டித்துள்ளார்.

பாகிஸ்தான் கப்டன் இம்ரான்கான் போன்று சவாலை சமாளிக்கும் திறன் அசாருதீனிடம் இல்லை எனவும். அணி வீரர்களை அவர் கண்டிப்பதில்லை எனவும் இந்த வகையில் ரவிசாஸ்திரி கபில்தேவ் ஆகியோர் சிறந்த கப்டன்கள் எனவும் பிரபாகர் தெரிவித்துள்ளார்.

## பொலிஸ் அதிகாரிமானநஷ்டவழக்கு ரிச்சார்ட்டின் தாயாருக்கு சாதகமாக நீதிமன்றுதீர்ப்பு

பொலிஸ அதிகாரி ஒருவருக்கு எதிராக காலஞ்சென்ற பத்திரிகையாளரான ரிச்சர்ட் டீ சொய்சாவின் தாயார் மனோராணி சரவணமுத்து தாக்கல் செய்தவழக்கு தொடர்பாக உயர் நீதிமன்றம் அவருக்கு சாதகமான தீர்ப்பை வழங்கியுள்ளது.

தமது மகனை கடத்தியதாக பொலிஸ் அதிகாரி ஒருவர் மீது திருமதி மனோராணி வழக்குத்தாக்கல் செய்தார். எனினும் அவ்வதிகாரி மீது வழக்கு தொடர தகுந்த ஆதாரங்கள் இல்லை என அதை சட்டமா அதிபர் நிராகரித்தார்.

இதைத்தொடர்ந்து அந்த பொலிஸ அதிகாரி மனோராணி மீது 10 இலட்சம் ரூபா மானநஷ்ட வழக்கை தொடுத்தார்.

இவ்வழக்கைகொண்டுசெல்வதற்கான தனது ஆவணங்கள் பொலிஸாரிடம் இருப்பதாகவும் இதைத்தர பொலிஸார் மறுப்பதாகவும் மனோராணி உயர் நீதிமன்றில் வழக்குத் தொடுத்தார்.

இப்போது நீதிமன்றம் அத்தாயாரின் ஆவணங்களை பொலிஸார் திருப்பிகொடுக்குமாறு தீர்ப்பளித்துள்ளது

இதனால் அப்பொலிஸ அதிகாரி தொடுத்தமான நஷ்ட வழக்கு ஆரம்பமாவதற்கு முன்பாகவே திருமதி மனோராணியிடம் அவரது ஆவணங்கள் திருப்பி ஒப்படைக்கப்பட்டுஅவர்வழக்கை தொடர வழி செய்யப்படும்.

### இரகஸிய பொலிஸால் கைது

மட்டக்களப்பு நகருக்கு விறகு எடுத்துச் சென்று விற்றுவிட்டு திரும்பிய பொதுமகன் ஒருவர் கலையிறக்கி ஸ்ரீலங்கா இரகஸியப் பொலிஸாரினால் கைது செய்யப்பட்டார் சி. யோகராசா என்பவரையே இரகஸியப் பொலிஸார்கண்ணைக் கட்டிகொண்டு சென்றனர்

### புதிய தலைவர்

வேலணைப நோ. கூ. சங்கத்தின் புதிய இயக்குநர் சபையின் தலைவராக திரு பொன்னம்பலம் மாசிலாமணி நியமிக்கப்பட்டுள்ளார்

★ சர்வதேசநீதிமன்றில் அமெரிக்கா

## நாம் மிரட்டவில்லை குற்றவாளிகளையே கேட்கிறோம்

வல்லரசு என்ற ரீதியில் நாம் லிபியாவை மிரட்டவில்லை குற்றவாளிகளை ஒப்படைக்குமாறே கேட்கின்றோம். இது கோரிக்கையே தவிர மிரட்டல் அல்ல இவ்வாறு அமெரிக்க தரப்பில் சர்வதேச நீதிமன்றில் நேற்று ஆஜரான அமெரிக்க சட்ட ஆலோசகர் வில்லியம்ஸ கூறினார்

லிபியா தாக்கல் செய்த வழக்கை சர்வதேச நீதிமன்றம் நேற்று முன்தினம் விசாரணைக்கு எடுத்துக்கொண்டது அமெரிக்காவும் பிரிட்டனும் வல்லரசு என்ற ரீதியில் தம்மை மிரட்டுவதாக லிபியா குற்றஞ்சாட்டியிருந்தது தெரிந்ததே

எனினும் பொதுமக்கள் சென்ற விமானத்தை லிபியா தகர்த்தது குற்றம் என அமெரிக்கா வாதிடுகிறது

★ பிரிகேடியர் பீரிஸ்

## அரசியல் தீர்வு இன்றி கிளர்ச்சியை வெல்லமுடியாது

"திருகோணமலை மாவட்டத்தில் பாதுகாப்பு நிலைமைகள் முன்னேற்றம் அடைந்துள்ள போதிலும் புலிகளின் பதுங்கி இருந்து நடத்தும் தாக்குதல்கள் நிகழ்கூடும் இப்பொழுது அவர்கள் புதிய தொரு பாணியைப் பின்பற்றுகிறார்கள் அதாவது தாக்கி விட்டு மறைவது"

இவ்வாறு திருகோணமலை மாவட்ட இராணுவப் பொறுப்பதிகாரி பிரிகேடியர் சிறி பீரிஸ் கொழும்புப் பத்திரிகை ஒன்றுக்கு அளித்த பேட்டியொன்றில் குறிப்பிட்டுள்ளார்.

மாத்தறையில் இருந்து வந்த 1000 மீனவர்களும் இங்கு இருக்கிறார்கள். மீன்பிடிப்பதற்கு இருந்த தடை நீக்கப்பட்டுவிட்டதால் இவர்கள் பருவகால தொழிலுக்கு வந்துள்ளனர்" என மேலும் கூறினார்.

"உலகில் எந்த நாட்டிலும் இராணுவமோ அன்றி பாதுகாப்பு படையோ கிளர்ச்சியாளர்களை அரசியல் தீர்வு மூலம் அன்றி வெற்றி பெறுவது கிடையாது என மேலும் அப்பேட்டியில் கூறினார்.

### மாநில் அரசு கலைப்பு

இந்திய வடகிழக்கு மாநிலமான நாகலாந்து சட்டசபேரவை நேற்றுக்கலைக்கப்பட்டது அங்கு ஜனாதிபதி ஆட்சி அமுல் செய்யப்பட்டது ஸதிரமற்ற நிலை காணப்பட்டமையே மாநில அரசு கலைக்கப்பட்டமைக்கு காரணம்என உள்துறை அமைச்சர் சவான் கூறினார்

## நாளை செஞ்சிலுவைத் தேர்தல் பிரசாரம் சூடுபிடிக்கிறது

நாளை நடைபெறவுள்ளசெஞ்சிலுவைச் சங்கத்தேர்தல்களுக்கான பிரசார வேலைகள் இரவு பகலாக நடைபெறுகின்றன

புதிய நிர்வாகிகளுக்கு ஆதரவாகவும், எதிராகவும் பிரசாரங்கள் மேற்கொள்ளப்படுகின்றன

புதிதாகப் போட்டியிடுபவர்கள் தாம் பதவிக்கு வந்தால் தற்போதைய போர்க்கால சூழ்நிலையில் திறமையாகச் செயற்படுவோம் என்றும் அகதிகளுக்கு நிவாரணப் பணிகள் மேற்கொள்வோம் எனவும் பிரசாரம் செய்கின்றனர்

பழையவர்கள் தாம் இதுவரை செய்த பணிகளைத் தொடர தமக்கு ஆதரவு தருமாறும் பிரசாரம் செய்துவருகின்றனர். 01

## கொழும்புத் தபால்களை இன்று பெட்டியில் சேர்க்கவும்

யாழ் பிரதம தபாற்கந்தோரில் இன்று நண்பகல் 2 மணிக்கு முன்னதாக கொழும்பு மற்றும் வெளிநாட்டுக் கடிதங்களைச் சேர்க்குமாறு அறிவிக்கப்படுகிறது

இவை 30 ஆம் திகதி கொழும்பு செல்லும் கப்பலில் அனுப்பிவைக்கப்படும் 06

### மெய்வல்லுநர் போட்டி

அராலி சரஸ்வதி மகாவித்தியாலய வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி 29 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2மணியளவில் வித்தியாலய அதிபர் திருமதி கோ. அம்பலவாணர் தலைமையில் நடைபெறவுள்ளது.

பண்டத்தரிப்புக் கல்விக் கோட்ட பிரதிக்கல்விப்பணிப்பாளர் திரு. எஸ் வி மகேசன் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்கிறார்.

இளைப்பாறிய வட்டுக்கோட்டை கொத்தணி அதிபர் திரு நா. வேலுப்பிள்ளை சிறப்பு விருந்தினராகக்கலந்து கொள்வார். 18

## தொண்டர் ஆசிரியர் மறியல் திணைக்களம் ஸ்தம்பிதம்

யாழ், மாவட்ட பாடசாலைகளில் கடமையாற்றும் தொண்டர் ஆசிரியர்கள் நிரந்தர நியமனம் வழங்க கோரி நேற்று முதற்கட்டமாக யாழ், கல்வித்திணைக்களத்துக்கு முன்னால் ஒருநாள் மறியல் போராட்டத்தை நடாத்தினர்.

சுமார் 250க்கும் மேற்பட்ட தொண்டர் ஆசிரியர்கள் காலை 8 மணியில் இருந்து பிற்பகல் 2மணிவரை கல்வித்திணைக்களத்துக்கு முன்னால் நின்று ஊழியர்கள் ஒருவரும் வேலைக்கு செல்லாதவாறு தமது போராட்டத்தை நடாத்தி கல்வித்திணைக்களத்தை ஸதம்பிதம் அடையச்செய்தனர்.

பின்னர் அவர்களது நிரந்தர நியமனம் தொடர்பான மகஜர் ஒன்றையும் பிரதம கல்வி அதிகாரி த. தியாகராசாவிடம் கையளித்தனர். 47 17

● செஞ்சிலுவைத் தேர்தல்

## கிளைச் செயலாளர் மீது நம்பிக்கையில்லா பிரேரணை

இலங்கை செஞ்சிலுவைச் சங்க யாழ் உதவி அரசாங்க அதிபர் பிரிவின் செயலாளர் மீது இப்பிரிவின் செயற்குழு நம்பிக்கை இல்லாத் தீர்மானம் ஒன்றை கொண்டு நிறைவேற்றி உள்ளதாக கூறப்படுகிறது.

### அன்பளிப்பு

இலங்கை செஞ்சிலுவைச் சங்க யாழ் கிளையினால் யாழ் உதவி அரசாங்க அதிபர் பிரிவு செஞ்சிலுவைச் சங்கத்திற்கு ஜெனரேட்டர் ஒன்று அன்பளிப்பாக வழங்கப்பட்டுள்ளது இதனை யாழ் நகரிலுள்ள அதிக மாணவர்கள் இரவு நேரங்களில் வந்து கல்வி கற்கக்கூடிய வசதிகளை உடைய பாடசாலை ஒன்றுக்கு வழங்கப்படும் (01)

இப்பத்திரிகை முரசொலி பப்ளிஷேர்ஸ் (பிறைவேற்)லிமிற்றெட் திருவனத்தினரால் யாழ்கஸ்தூரியார் வீதி 'லஷ்மிபில்டிங்'இல் உள்ள அச்சகத்தில் 28-03-1992 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது